# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2018 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

*(2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2018, மே மாதம் 18 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2018 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,*
## *நீதித்துறை (திருத்தச்) சட்டம்*

*[2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]*

*ச.வ.- ஒ. 59/2017*

### *1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தில் 12அ, 12ஆ மற்றும் 12இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம், அதன் 12 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது; இவை அச்சட்டவாக்கத்தின் 12அ, 12ஆ மற்றும் 12இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும்:-*

*"அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தின் குறித்தசில தவறுகள் தொடர்பிலான நியாயாதிக்கம்.*

*12அ. (1) (அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஒரு மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் நியதிகளின்படி, (இதனகத்துப் பின்னர் "நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்ற நீதிபதிகளுளிருந்து பிரதம நீதியரசரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டதும் ஒன்றாக அமருகின்றதுமான மூன்று நீதிபதிகளுடன் இச்சட்டத்துக்கான ஆறாம் அட்டவணையில்*

குறித்துரைக்கப்பட்ட நிதிசார் மற்றும் பொருளாதார தவறுகள் தொடர்பிலும் மற்றும் அத்தகைய ஏதேனும் தவறின் அதே கொடுக்கல்வாங்கலின் போது புரியப்பட்ட வேறேதேனும் தவறு தொடர்பிலும், எவரேனுமாளுக்கெதிராகக் குற்றப்பத்திரத்தின் மீதான குற்றவழக்குகளையும் எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையிலும் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும் கேட்டு, விளங்கித் தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) அமைச்சர், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், நிரந்தர நீதாய மேல்நீதிமன்றத்தின் அத்தகைய நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்.";

(2) (அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நிரந்தர நீதாய மேல்நீதிமன்றமானது-

(i) இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவில் எவரேனுமாளினால் புரியப்பட்ட; அல்லது

(ii) இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியேயுள்ள ஏதேனுமிடத்தில் அல்லது எத்தகைய வகுதியினதுமான ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில் அல்லது அவை தொடர்பாக இலங்கைப் பிரசையொருவரினால் எங்கேனும் புரியப்பட்ட,

(1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறுகள் தொடர்பில் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஐயம் தவிர்ப்பதற்காக ஆறாம் அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறுகள் தொடர்பில் வேறு ஏதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது தொடர்ந்து வலுவில் இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(3) அத்தகைய நிரந்தர நீதாய மேல்நீதி மன்றத்தின் நியாயாதிக்கமானது-

(அ) மேல் மாகாணத்துக்காக தாபிக்கப்பட்ட நீதிமன்றமாக அத்தகைய நீதிமன்ற மிருப்பின், பிரதம நீதியரசரின் ஒருப்பாட் டுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடியவாறாக மேல்மாகாணத்தினுள் கொழும்பிலும் அவசியமானவிடத்து வேறு ஏதேனும் இடத்திலும் அமர்ந்துள்ள அந்நீதிமன்றத் தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய நீதிமன்றம் வேறு ஏதேனும் மாகாணத்துக்காக தாபிக்கப்பட்ட நீதிமன்ற மாகவிருப்பின், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் வர்த்தமானியில் வெளி யிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடிய வாறாக அம்மாகாணத்தினுள் அத்தகைய இடத்தில் அமர்ந்துள்ள அந்நீதிமன்றத் தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(4)(அ) விடயத்திற்கேற்ப, சட்டத்துறைத் தலைமை யதிபதி அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பின்மீது இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறின்-

(i) தன்மையும் சூழ்நிலைகளும்;

(ii) பாரதூரமான தன்மை;

(iii) சிக்கலானதன்மை;

(iv) பலிக்குட்படுத்தப்பட்டவரின் மீதான தாக்கம்; அல்லது

(v) அரசின்மீதான தாக்கம்,

என்பனவற்றைக் கவனத்துட்கொண்டு, அத்தகைய தவறு தொடர்பில் குற்றவியல் நடவடிக்கைமுறைகள் நிரந்தர நீதாய மேல்நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதல் வேண்டுமா எனும் பணிப்பிற்காக பிரதம நீதியரசருக்கு அத்தகைய தவறின் புரிதல் தொடர்பிலான தகவலை ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக் கற்களுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை, அப்பந்தியின்கீழ் தகவலை ஆற்றுப்படுத்துவதில் திருப்திசெய்யப்பட்டுள்ளதெனப் பிரதம நீதியரசர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் தனது கைப்பட கட்டளைமூலம் அத்தகைய தவறு தொடர்பில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் நிரந்தர நீதாய மேல்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட வேண்டுமெனப் பணிக்கலாம்.

(5) அவ்வாறு பிரதம நீதியரசர் பணிக்குமிடத்து, அத்தகைய நிரந்தர நீதாய மேல்நீதிமன்றத்தின் முன்னரான விளக்கமொன்று–

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியினாலான அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பின்மீது இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பணிப்பாளர் தலைமையதிபதியினாலான குற்றப்பத்திரத்தின் மீது நடாத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) துரிதமானமுறையில் நடாத்தப்பட்டு நிறைவுசெய்யப்படுதல் வேண்டும்;

(இ) பதியப்படவேண்டிய விதிவிலக்கான சூழ்நிலைகள் ஏலவேயுள்ளதென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டாலொழிய, அதன் துரிதமான தீர்த்துவைத்தலை உறுதிப்படுத்துவதற்கு நாளாந்தம் கேட்கப்படுதல் வேண்டும்.

*(6)* (அ) நிரந்தர நீதாய மேல்நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி ஏதேனும் விளக்கம் தொடங்கும் முன்னர் அல்லது தொடங்கிய பின்னர் இறக்கு மிடத்து அல்லது பதவிவிலகுமிடத்து அல்லது அதன் முழுமையை அல்லது பாகத்தைக் கேட்பதிலிருந்து விடுவிக்கப்படுவதற்குக் கோருமிடத்து அல்லது செயலாற்றுவதற்கு மறுக்குமிடத்து அல்லது இயலாத வராகவருமிடத்து அல்லது மேல் நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக வேறு வகையாக இல்லாதொழியு மிடத்து, பிரதம நீதியரசர் எந்த இறப்பு, விலகுகை, விடுவிப்பு, மறுப்பு, இயலாமை அல்லது காரணம் அத்தகைய நீதிபதியை அத்தகைய மேல் நீதிமன் றத்தின் நீதிபதியொருவராக இல்லாதொழிவத னைச் செய்விக்கின்றதோ அந்த இறப்பு, விலகுகை, விடுவிப்பு, மறுப்பு, இயலாமை அல்லது வேறு காரணம் ஏற்பட்டதிலிருந்து இருவாரங்களுக்குப் பிந்தாமல், அத்தகைய விளக்கத்தின் முழுமையை அல்லது ஏதேனும் பாகத்தைக் கேட்பதற்கு இலங்கைக் குடியரசின் மேல்நீதிமன்றத்தினது வேறொரு நீதிபதியை அவரினிடத்தில் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வின்கீழ் புதிய நீதிபதியொருவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பெயர்நியமனத்துக்குமுன்னர் பெறப்பட்ட ஏதேனும் சான்றை மீளப்பெறுதல் அவசியமாதலாகாது என்பதுடன், நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம், இச்சட்டத்தின் *48* ஆம் பிரிவுக்கான காப்பு வாசகத்துக்கமைய, அத்தகைய பெயர்நியமனத்துக்கு நேர்முன்னர் விளக்கமானது எக்கட்டத்தில் இருந்ததோ அக்கட்டத்திலிருந்து விளக்கத்தைத் தொடர்ந்துநடாத்துவதற்கு உரித்துடையதாதலும் வேண்டும்.

(7) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னர் வழக்குநடவடிக்கைகளையும் விளக்கங்களையும் தொடுத்தலுக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.

மேன்முறையீட்டுரிமை.

12ஆ. (1) பிரிவு 12அ வின்கீழ் நிரந்தர நீதாய மேல் நீதிமன்றமொன்றினால் நடாத்தப்பட்ட விளக்கமொன்றில் அளிக்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பு, தண்டனைத்தீர்ப்பு அல்லது கட்டளைக்கெதிரான மேன்முறையீடொன்று, அத்தகைய தீர்ப்பு, தண்டனைத்தீர்ப்பு அல்லது கட்டளை அளிக்கப்பட்டதிலிருந்து இருபத்தெட்டு நாட்களினுள் உயர் நீதிமன்றத்துக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பிரதம நீதியரசரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அந்நீதிமன்றத்தின் ஐந்துக்குக் குறையாத நீதிபதிகள் குழாமொன்றினால் கேட்கப்படுதலும் வேண்டும்.

(2) யூரர் சபையில்லாமல் விளங்கப்படும் வழக்குகளில் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தண்டனைத் தீர்ப்புகள் அல்லது கட்டளைகளுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மேன்முறையீடுகளை ஆளுகின்ற 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தினதும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், 12அ என்னும் பிரிவின்கீழ் நிரந்தர நீதாய மேல்நீதிமன்றத்தின் முன்னர் நடாத்தப்பட்ட விளக்கமொன்றில் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கள், தண்டனைத்தீர்ப்புகள் அல்லது கட்டளைகளுக்

கெதிராக (1) ஆம் உட்பிரிவின்கீழ் உயர்நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடுகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட எதேனும் மேன்முறையீடு, துரிதமானமுறையில் கேட்டுத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

*நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் எந்தத் தவறுகளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுகின்றதோ அந்தத் தவறுகள் தொடர்பாக எழுத்திலான சட்டத்தைப் பொருளமைத்துக் கொள்ளுதல்.*

12இ. பிரிவு 12அ வின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்று தொடர்பில், 12அ எனும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, இயைபான சட்டத்தில் வேறேதேனும் நீதிமன்றத்துக்கான குறிப்பீடொன்று, நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்துக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 63ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு, "மாவட்ட நீதிமன்றங்கள்" மற்றும் "நீதிவான் நீதிமன்றங்கள்" என்னும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

" "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பது 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு என்று பொருளாகும்;

"இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் ஆறாம் அட்டவணையைச் சேர்த்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் அட்டவணையைச் சேர்ப்பதன் மூலம் அச்சட்டவாக்கம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"**ஆறாம் அட்டவணை** [பிரிவு 12அ (1)]

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| **சட்டம்** | **பிரிவும் தவறும்** |
| *தண்டனைச் சட்டக்கோவை (அத்தியாயம் 19).* | *366* - திருட்டு. |
| | *386* - குற்றமுறையான ஆதனக் கையாடல். |
| | *387* - இறப்பெய்திய ஆளொருவர் இறக்கும் நேரத்தில் அவரது உடைமையில் வைத்திருந்த ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடல். |
| | *388* - குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம். |
| | *390* - பொருட்களை ஏற்றி இறக்குபவர் முதலியோரால் புரியப்படும் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகம். |
| | *391* - எழுதுநர் அல்லது சேவையாளர் ஒருவரால் புரியப்படும் குற்றமுறை யான நம்பிக்கைத் துரோகம். |
| | *392* - பகிரங்க சேவையாளர் அல்லது வங்கியாளர், வணிகர் அல்லது முகவர் என்போரால் புரியப் படும் குற்றமுறையான நம்பிக் கைத் துரோகம். |
| | *392அ* - பணம் அல்லது பணத்தின் இருப்புத் தொடர்பில் பகிரங்க சேவையாளரால் புரியப்படும் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம். |

| | | | |
|---|---|---|---|
| | 392ஆ | - | அஞ்சற்பொருட்கள் தொடர்பில் முகவரால் புரியப்படும் குற்றமுறையான நம்பிக்கைத்துரோகம். |
| | 394 | - | களவாடப்பட்ட ஆதனத்தை நேர்மையீனமாகப் பெறுதல். |
| | 395 | - | களவாடப்பட்ட ஆதனங்களில் வழமையாக வியாபாரஞ்செய்தல். |
| | 396 | - | களவாடப்பட்ட ஆதனத்தை ஒளித்துவைப்பதில் உதவிபுரிதல். |
| | 398 | - | ஏமாற்றுதல். |
| | 399 | - | ஆள்மாறாட்டஞ்செய்து ஏமாற்றுதல். |
| | 401 | - | எவ்வாளின் அக்கறையை தவறாளர் பாதுகாக்கக் கட்டுப்பட்டுள்ளாரோ அவ்வாளுக்கு அதனால் முறைகேடான இழப்பு ஏற்படலாம் என்ற அறிவுடன் ஏமாற்றுதல். |
| | 403 | - | ஏமாற்றலும் ஆதனத்தை ஒப்படைக்குமாறு நேர்மையீனமாகத் தூண்டுதலும். |
| | 404 | - | கடன்தருநருக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுதலைத் தவிர்த்தற்காக ஆதனத்தை நேர்மையீனமாக அல்லது மோசடியாக அகற்றுதல் அல்லது மறைத்து வைத்தல். |
| | 405 | - | தவறாளருக்கு வருமதியான ஒரு தனிசை அல்லது கோரிக்கையை அவரின் கடன்தருநருக்கு கிடைக்காதிருக்கும் வண்ணம் நேர்மையீனமாக அல்லது மோசடியாகத் தடுத்தல். |
| | 406 | - | பிரதிபயன் பற்றி பொய்யான கூற்றைக் கொண்டுள்ள அறுதியுறுதியை நேர்மையீனமாக அல்லது மோசடியாக நிறைவேற்றுதல். |
| | 407 | - | ஆதனத்தை நேர்மையீனமாக அல்லது மோசடியாக அகற்றுதல் அல்லது ஒளித்துவைத்தல் அல்லது கோரிக்கையை விட்டுவிடல். |

| | |
|---|---|
| | *452* - பொய் ஆவணம் புனைதல். |
| | *453* - பொய் ஆவணம் ஆக்கல். |
| | *455* - நீதிமன்றப் பதிவேட்டை அல்லது பிறப்பு முதலியவற்றின் பகிரங்க இடாப்பைப் பொய்யாகப் புனைதல். |
| | *456* - பெறுமதியான பிணையை அல்லது மரண சாசனத்தைப் பொய்யாகப் புனைதல். |
| | *457* - ஏமாற்றும் நோக்கத்துக்காகப் பொய் ஆவணம் புனைதல். |
| | *459* - பொய்யாகப் புனையப்பட்ட ஆவணமொன்றை உண்மையானதாகப் பயன்படுத்தல். |
| | *460* - 456ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் பொய் ஆவணம் புனைதலைப் புரியும் உளக் கருத்துடன் போலியான இலச்சினை, தகடு முதலியவற்றை ஆக்குதல் அல்லது உடைமையில் வைத்திருத்தல். |
| | *461* - வேறுவிதமாகத் தண்டிக்கப்படற்பாலதான ஒரு பொய் ஆவணம் புனைதலைப் புரியும் உளக்கருத்துடன் போலியான இலச்சினை, தகடு முதலியவற்றை ஆக்குதல் அல்லது உடைமையில் வைத்திருத்தல். |
| | *462* - பொய்யாகப் புனையப்பட்டதென அறிந்துகொண்டு உண்மையானதெனப் பயன்படுத்தும் உளக்கருத்துடன் பொய்யாகப் புனையப்பட்ட பதிவேட்டை அல்லது பெறுமதியான பிணையை அல்லது மரண சாசனத்தை உடைமையில் வைத்திருத்தல். |
| | *463* - 456 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மையை உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்படும் சின்னத்தை அல்லது குறியைப் போலியாகப் புனைதல் அல்லது போலியாகக் குறியிடப்பட்ட பொருளை உடைமையில் வைத்திருத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | 464 | - | 456 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட ஆவணங்கள் தவிர்ந்த ஆவணங்களின் உண்மையை உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்படும் சின்னத்தை அல்லது குறியைப் போலியாகப் புனைதல் அல்லது போலியாகக் குறிப்பிடப்பட்ட பொருளை உடைமையில் வைத்திருத்தல். |
| | 467 | - | கணக்குகளைப் பொய்ப்பித்தல். |
| | 468 | - | ஏதேனும் நாணயத்தாள், வங்கிப் பத்திரம் அல்லது நாணயத்தின் ஏதேனும் போலியுருவை உடைமையில் வைத்திருத்தல். |
| | 100, 101, 101அ, 102, 113அ, 113ஆ | - | இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள, தண்டனைச் சட்டக்கோவையின் தவறுகளைப் புரிவதற்குச் சதிசெய்தலும் உடந்தையளித்தலும். |
| 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம். | 3 | - | பணம் தூய்தாக்கல் தவறு |
| | 4 | - | இப்பிரிவின்கீழ் தவறொன்றாக அமைகின்ற ஒருசெயல். |
| | | | இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழான தவறுகளைப் புரிவதற்குச் சதி செய்தலும் உடந்தையளித்தலும். |
| (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம். | 14 | - | நீதிமுறை அலுவலர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலஞ்சம் கொடுத்தல். |
| | 15 | - | பகிரங்க அலுவலர்களை நேர்காணலுக்காகப் பாராளுமன்ற உறுப்பினரினால் அவாநிறைவு ஏற்றுக் கொள்ளப்படுதல். |
| | 16 | - | பொலிசு அலுவலர்கள், சமாதான அலுவலர்கள் மற்றும் வேறு பகிரங்க அலுவலர்களுக்கு இலஞ்சம் கொடுத்தல். |

| | |
|---|---|
| | 17 - ஒப்பந்தங்கள் தொடர்பாக உதவியளிப்பதற்காக அல்லது செல்வாக்குச் செலுத்துவதற்காக இலஞ்சம் கொடுத்தல். |
| | 18 - கேள்விப்பத்திரங்களை மீளப்பெறுவதனைப் பெற்றுக்கொடுப்பதற்காக இலஞ்சம் கொடுத்தல். |
| | 19 - அரசாங்க அலுவல் தொடர்பில் இலஞ்சம் கொடுத்தல். |
| | 20 - உரிமைக் கோரிக்கைகளைச் செலுத்துதல், நியமனங்கள், தொழில்கள், மானியக்கொடைகள், குத்தகைகள் மற்றும் வேறு நன்மைகள் சம்பந்தமாக இலஞ்சம் கொடுத்தல். |
| | 21 - அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களையுடைய ஆட்களினால் பகிரங்க அலுவலர்களுக்கு இலஞ்சம் கொடுக்கப்படுதல். |
| | 22 - உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினருக்கு இலஞ்சம் கொடுத்தல் மற்றும் உள்ளூரதிகாரசபையின் அல்லது அத்தகைய நிறுவனத்தின் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு இலஞ்சம் கொடுத்தல். |
| | 23 - உள்ளூரதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினரினது வாக்கின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அச்சுறுத்துதல்களை அல்லது மோசடியை அல்லது இலஞ்சத்தைப் பயன்படுத்துதல். |

| | |
|---|---|
| | 23அ - இப்பிரிவின்கீழ் இலஞ்சத்தின் மூலம் பெறப்பட்ட ஆதனமெனக் கருதப்பட்ட ஆதனத்தை அல்லது இலஞ்சத்தின் மூலம் பெறப்பட்ட ஆதனம் எந்த ஆதனமாக மாற்றப் பட்டதோ அல்லது மாற்றப்பட்டி ருந்ததோ அந்த ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருத்தல் அல் லது சொந்தமாக வைத்திருந்திருத்தல்.<br><br>24 - அவாநிறைவு ஏற்றுக்கொள்ளல்.<br><br>25 - இலஞ்சச் சட்டத்தின் பாகம் I இன் கீழ் ஒரு தவறுக்கு உடந்தையளித் தலைப் புரிவதற்கு எத்தனித்தல்.<br><br>70 - ஊழல்.<br><br>இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள, இலஞ்சச் சட்டத்தின்கீழான தவறுகளைப் புரிவதற்குச் சதிசெய்தலும் உடந்தை யளித்தலும். |
| 1982ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டம். | 3 - பகிரங்க ஆதனத்தைத் திருடுதல்.<br><br>5 - நேர்மையற்றமுறையில் கையாடல் செய்தல், குற்றமுறையான நம்பிக்கை மீறல், ஏமாற்றுதல், பொய் ஆவணம் புனைதல், மற்றும் கணக்குகள் பொய்ப் பித்தல் என்பன.<br><br>இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தின் கீழான தவறுகளைப் புரிவதற் குச் சதிசெய்தலும் உடந்தையளித்தலும். |
| 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம். | 3 – பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழான தவறுகள்.<br><br>இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின்கீழான தவறு களைப் புரிவதற்குச் சதிசெய்தலும் உடந்தை யளித்தலும். |

| | |
|---|---|
| 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டம் | வங்கித்தொழில் சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம் | பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் சட்டம் | உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் | இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம் | காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழிற் சட்டம் | நிதித்தொழிற் சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கொடுப்பனவு உபாயங்கள் மற்றும் மோசடிகள் சட்டம் | கொடுப்பனவு உபாயங்கள் மற்றும் மோசடிகள் சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணனி குற்றச்செயல் சட்டம் | கணனி குற்றச்செயல் சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயல். |
| பல்தேசியங்களிடையே ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழான தவறுகள்.”. | |

ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*